**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.46/2021**
**Prosecution Witness**:9

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.ஜீவானந்தம் (PW9 ) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th **day of March 2026** by V.Nivedha Assistant, District Munsif Cum Judicial Magistrate Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை:–**

நான் தற்போது திருப்பூர் மாவட்டம் சைபர் கிரைம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.03.2021ம் தேதி நான் மலையம்பாளையம் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது மலையம்பாளையம் காவல்நிலைய காவல் ஆய்வாளர் கூடுதல் பொறுப்பு வகித்த கொடுமுடி வட்ட காவல் ஆய்வாளர் K.முருகன் என்பவர் முதல் புலன் விசாரணை முடித்து மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்த மலையம்பாளையம் காவல்நிலைய குற்ற எண்.85/2021 ச/பி.279, 304(A) இதச வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் 31.03.2021ம் தேதி இவ்வழக்கின் சம்பவ இடமான ஈரோடு – கரூர் ரோடு கருமாண்டாம்பாளையம், குளதோட்டம், கார்த்திகேயன் வீட்டு முன்பு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டதில் சம்பவ இடமானது காவல் ஆய்வாளர் முருகன் தயார் செய்த பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் கண்டுள்ளவாறு அமைந்துள்ளதால் நான் தனியாக பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை. சாட்சிகள் மயில்சாமி, கவின், மலையப்பன், சிவகுமார், சிவா, பாக்கியம், பிரகாஷ், பிரபு, விஜயகுமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்ததில் அவர்கள் காவல் ஆய்வாளர் முருகன் அவர்கள் விசாரணையில் கூறியதையே எனது விசாரணையிலும் கூறியதால் நான் தனியாக அவர்களது வாக்குமூலத்தை பதிவு செய்யவில்லை.

2. 31.03.2021ம் தேதி காலை 10.00 மணிக்கு குற்றத்தை ஒப்புக்கொண்டு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.24 08:51:22 +0530

மலையம்பாளையம் காவல்நிலையம் ஆஜரான இவ்வழக்கின் எதிரி கார்த்திக் என்பவரை கைது செய்து திரேக பிரசோதனை செய்து தக்க பிணையின் பேரில் விடுவித்தேன். அன்றைய தினமே எதிரியின் வாகனமான TN 28 L 6883 Bajaj CT 100 என்ற இருசக்கர வாகனத்தை வாகன தணிக்கைக்காக ஈரோடு கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பிவைத்தேன்.

3. 24.06.2021ம் தேதி வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் இறந்துபோன ஜெயராஜ் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை மருத்துவர் சசிரேகா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். அந்த **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** விபத்து ஏற்படுத்திய எதிரியின் வாகனமான TN 28 L 6883 Bajaj CT 100 என்ற இருசக்கர வாகனத்தை வாகன தணிக்கை செய்த ஈரோடு கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் கதிர்வேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். அந்த **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே பிரேத பரிசோதனை வழிக்காவல் தலைமை காவலர் 673 அப்பாதுரை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கை நான் புலன் விசாரணை செய்ததில் வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வருவதாலும், இவ்வழக்கின் எதிரி கார்த்திக் வழக்கு சம்பவத்தின் போது அவரது வாகனமான TN 28 L 6883 Bajaj CT 100 என்ற இருசக்கர வாகனத்தை செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லாமல், செல்லத்தக்க வாகன பதிவு சான்று, செல்லத்தக்க காப்பீடு சான்று இல்லாமலும் ஓட்டி சென்று விபத்து ஏற்படுத்தியுள்ளது தெரிய வரவே 24.06.2021ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி கார்த்திக் மீது ச/பி.279, 304(A) இதச மற்றும் பிரிவுகள் 3 உ/இ 181, 196 உ/இ 177, 192 மோட்டார் வாகன சட்டத்தின்படி இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். சாட்சிகள் மயில்சாமி, கவின் ஆகியோர்கள் எனது விசாரணையில் வாக்குமூலத்தில் உள்ளதுபோல் தெரிவித்தனர்.

மோட்டார் வாகன ஆய்வறிக்கை, பிரேத பரிசோதனை அறிக்கை, ஆகியவற்றை அரசு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.24 08:51:35 +0530

தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யும் பொருட்டு அரசு தரப்பில் கு.வி.மு.ச.294(3) பிரிவின் படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சான்று ஆவணமாக குறியீடு செய்யப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

சம்பவ ரோடு ஈரோடு –கரூர் மாநில நெடுஞ்சாலை என்றால் சரிதான். இந்த சம்பவமானது புகாரின் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும், மாநில நெடுஞ்சாலையை குறுக்கே கடந்த போது தான் விபத்து நடந்ததாக தெரியவந்தது என்றால் சரிதான். சாட்சிகள் யாரும் வாகனங்கள் வருவதை கவனித்து இருபுறமும் பார்த்து இறந்து போனவர் ரோட்டை குறுக்கே கடந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி இடத்தில் ரோட்டை குறுக்கே கடப்பதற்கு பாதசாரி குறியீடுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.24 08:51:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.